செ.வெ.எண்:10 நாள்:03.10.2018

# வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கான உதவித்தொகை பெற 30.11.2018-க்குள் விண்ணப்பிக்கவேண்டும். மாவட்ட ஆட்சியர் முனைவர் சீ. சுரேஷ் குமார், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

நாகப்பட்டினம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் படித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளான காதுக்கேளாத வாய்ப்பேசாத மற்றும் மனநலம் குன்றிய இளைஞர்களின் துயரினை துடைக்கும் வகையில் வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகைத் திட்டத்தினை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை செயல்படுத்தி வருகிறது இந்த திட்டத்தின்கீழ் மாதம் ஒன்றுக்கு பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கு கீழ் படித்தவர்களுக்கு ரூ.600/-ம் மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.750/-ம் மற்றும் பட்டதாரி / முதுநிலை பட்டதாரிகளுக்கு ரூ.1,000/- வீதம் 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், இந்தத் திட்டத்தின்கீழ் 01.10.2018 முதல் 30.11.2018 வரை இந்த காலாண்டுக்கு பயன்பெற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து தொடர்ந்து பதிவினை புதுப்பித்து வரும் மாற்றுத்திறனாளிகள் கடந்த 30.09.2018 தேதியின் நிலவரப்படி குறைந்தபட்சம் 1 ஆண்டுக்கு மேல் வேலைவாய்ப்பு அலுவலக, உயிர்ப்பதிவேடுகளில் காத்திருப்பவராக இருக்க வேண்டும். மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 45 வயதிற்கு மிகாமலும் இதர வகுப்பினரை பொறுத்தமட்டில் 40 வயதிற்கு மிகாமலும் இருக்கவேண்டும். 10 ஆண்டுகள் வரை உதவித்தொகை வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகைபெற வருமான உச்சவரம்பு இல்லை. எனவே வருமானச் சான்று பெற வேண்டியதில்லை. **இ.சி.எஸ் வசதி உடைய தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இம்மாவட்டத்தில் விண்ணப்பதாரரின் பெயரில் கணக்கு தொடங்கி இருத்தல் வேண்டும். அவசியம் தங்களது வங்கிக்கணக்கினை ஆதார் எண்ணுடன் இணைத்திருக்கவேண்டும்.** மேலும் நாகப்பட்டடினம் மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான நல அலுவலகத்தால் எந்தவித உதவி தொகையும் பெறுதல் கூடாது.

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனைத்து அசல் கல்விச் சான்றுகள், வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை, மாற்றுத்திறனாளி அடையாள அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றுடன் அரசு விடுமுறை தினங்கள் மற்றும் சனி,ஞாயிறு தினங்கள் தவிர மற்ற வேலைநாட்களில் நாகப்பட்டினம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பிற்பகல் **02.00** மணிக்கு **30.11.2018** தேதிக்குள் நேரில் ஒப்படைக்கவேண்டும். விண்ணப்பித்தவர்களில் தகுதி உள்ள அனைவருக்கும் **01.10.2018** முதல் உதவித்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தினால் ஏற்கனவே பயனடைந்தவர்கள் மற்றும் தற்போது பயன்பெற்று வரும் மனுதாரர்கள் விண்ணப்பிக்க தேவையில்லை என மாவட்ட ஆட்சியர் **முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**